ரெலிகுளோப்!
ரெலிபோன் சேவையில்
வல்லவர்கள்,
நல்லவர்கள்
ரெலிகுளோப்
ஆர் ஜி. கட்டடம்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்நகர்

Registered as Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ. 1/-

யாழ்நகரில்
ஆறு ரெலிபோன்களைச்
சேவையில் ஈடுபடுத்தி
முழுமையாக ரெலிபோன்
சேவையிலேயே
கண்ணும் கருத்தும் உள்ள
ஒரே ஒரு நிறுவனம்
ரெலிகுளோப்
ரெலிபோன்: 25088 - ஆறு
சமாந்தர லைன்கள்

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆடி மீ 9 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜுல்கஃ பிறை 17 (25-07-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 213

# பயங்கரவாத தடுப்புச் சட்டம் இடை நிறுத்தப்படும்

## அரசு விரைவில் அறிவிக்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 25

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இடைநிறுத்தம் செய்யப்படும். இச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாதவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படுவர்.

இப்படி அரசு உயர்மட்டம் முடிவு எடுத்து இருப்பதாக உதயனுக்கு மிகவும் நம்பிக்கையாக அறியவந்துள்ளது.

அரசாங்கம் இதனை விரைவில் பகிரங்கப்படுத்தும் என்று நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண யோசனைகளைச் சமர்ப்பிக்கும்படி போராளி அமைப்புகளைக் கோருவது என்று அரசியல் கட்சிகள் மாநாடு தீர்மானித்தது அல்லவா?


இது சம்பந்தமான தீர்மானமும் வேண்டுகோளும் போராளி அமைப்புகளுக்கு அனுப்பப்படும் சமயம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இடைநிறுத்தம் செய்யும் அறிவித்தலை அரசாங்கம் வெளியிடும் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தை நடக்கும் போது பயங்கரவாதச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று அரசியல் கட்சிகள் மாநாட்டில் கலந்து கொண்ட ஐந்து கட்சிகள் வலியுறுத்தி வந்தன.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, நவசமசமாஜக் கட்சி, சிறிலங்கா மக்கள் கட்சி ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன ஜனாதிபதியைத் தனியாகச் சந்தித்துப் பேசியபோதும் தமது இந்தக் கோரிக்கையை மேலும் வலியுறுத்தி இருந்தன.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரும், பேச்சுவார்த்தை நேரத்தில் தமிழ் மக்கள் படைகளால் கொலை செய்யப்படுவது குறித்து ஜனாதிபதியிடம் முறையிட்டபோது, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்க வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தி இருந்தனர். (அ-எ)

முச்சந்தி முரளி



ஜூலைக் கறுப்பு தினம் நினைக்கவே...... என்பத்திமூணு ஜூலை மரணித்த தமிழ் மக்களுக்கு இன்னைக்கு எல்லோரும் அஞ்சலி செலுத்த வேணும் ......

## ராஜீவ் தொண்டா சந்திப்பு

சென்னை, ஜூலை 24

பிரதமர் ராஜீவ் காந்தியை இலங்கை அமைச்சர் தொண்டமான் இன்று புதுடில்லியில் சந்திக்கிறார்.

இலங்கை அரசு போராளிகளுடன் உடன்பாடு காண இந்தியா உதவ வேண்டும் என்பதை திரு தொண்டமான் பிரதமரிடம் வலியுறுத்துவார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அமைச்சர் தொண்டமான்,

''யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் வெறுமனே மாதிரியான சூழ்நிலையில் வாழுகிறார்கள்''— என்று குறிப்பிட்டார். (இ-எ)

# வடக்கில் இன்று கறுப்புத் தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கையில் நடைபெற்ற படுகொலைகளை நினைவு கூரும்முகமாக இன்று வட பகுதி முழுவதும் கறுப்புத் தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இதனை அடுத்து இன்று யாழ் நகரில் கடைகள் முழுவதும் மூடப்பட்டிருக்கும்.

பாடசாலைகள் எதுவும் நடைபெறமாட்டா.

இ.போ.ச. தனியார் பஸ் சேவைகள் உள்ளூர் வெளியூர் சேவைகள் எதுவும் நடத்த மாட்டா.

அரச அலுவலகங்களும், வங்கிகளும் மூடப்படும்.

பொது மக்கள் இன்றைய கறுப்புத் தினத்தை அனுஷ்டிக்கு முகமாக கறுப்புப் பட்டிகளை அணிந்து செல்வர்.

இன்றைய இத் தினத்திற்கு அனேக பொது ஸ்தாபனங்கள் ஆதரவு வழங்கி உள்ளன.

தொகுதிகள் தோறும் கூட்டங்களும், ஊர்வலங்களும் நடத்த உதத்த தமிழ் மக்கள் ஒன்றுசேர்ப்படுவதற்கு எதிரான போராட்டத்திற்கான இணைப்புக் குழு ஒழுங்கு செய்துள்ளது. (இ-10)

# குண்டுவெடித்து பஸ் சிதறியது

# 31 பேர் பலி

## வவுனியாவில் மூன்றாவது நாளாக அசம்பாவிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

பார்சல் குண்டு வெடித்ததில் பஸ் சிதறி சுக்கு நூறாகியது. இதில் 31 பேர் உயிரிழந்தனர். 33 பேர் காயமடைந்தனர்.

வவுனியா-அநுராதபுரம் வீதியில் இஸன்பஸகல என்னும் இடத்தில் நேற்றுக் காலை 11 மணியளவில் இச் சம்பவம் நடந்தது.

வவுனியாப் பகுதியில் இவ்வாரம் நடந்த மூன்றாவது அசம்பாவிதம் இது வாகும்.

பிரப்பமடு என்ற இடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை நடந்த நிலக்கண்ணிவெடிச் சம்பவத்தில் 29 பேர் பலியாகினர். அச் சம்பவத்தில் இறந்தோர் எண்ணிக்கை இப்போது 37 ஆக உயர்ந்துள்ளது.

புதன்கிழமை வவுனியா நகரில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் 10 பேர் காயமடைந்தனர்.

நேற்று வியாழக்கிழமை நடந்த மூன்றாவது சம்பவத்தில் சம்பந்தப்பட்ட பஸ்ஸும் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமானதாகும்.

மதவாச்சியில் இருந்து அநுராதபுரம் நோக்கி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அரசு-கூட்டணி பேச்சு முடிவு; இறுதித் தீர்வு எதுவும் இல்லை

கொழும்பு, ஜூலை 25

அரசு-கூட்டணிப் பேச்சுக்களில் இறுதித் தீர்வு எதுவும் காணப்படவில்லை.

இப்படி அரசியல் கட்சிகள் மாநாட்டுச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேச மாகாண சபைகளின் கீழ் இடம்பெற உள்ள அதிகாரப் பகிர்வு குறித்து இலங்கை அரசாங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் விவரமான, வெளிப்படையான பேச்சுக்களை நடத்தியது.

இப் பேச்சுக்கள் இம் மாதம் 13 ஆம் திகதியில் இருந்து 23 திகதி வரை நடந்தன.

அதிகாரப் பகிர்வு சம்பந்தமான அரசமைப்பு வரையறை பற்றியும் எந்த மட்டத்தில் அதிகாரப் பகிர்வு இடம்பெற வேண்டும் என்பது பற்றியும் மாகாண சபைகளுக்கு போதிய நிதி வழங்கல் பற்றியும் காணி, சட்டம்-ஒழுங்கு ஆகியன குறித்தும் பேச்சுக்களில் ஆராயப்பட்டது.

எந்த விஷயத்திலும் தீர்க்கமான முடிவு எதுவும் காணப்படவில்லை.

5 உறுப்பினர்கள் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணித் தூதுக்குழு 24-7-86 சென்னை திரும்புகிறது. மீண்டும் ஆகஸ்ட் முற்பகுதியில் மேலும் பேச்சுக்களை நடத்த கொழும்பு திரும்பும்.

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

## கூட்டணி சிறிமா சந்திப்பு

கொழும்பு ஜூலை 25

நேற்றுக்காலை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினர்.

சுமார் 2 மணித்தியாலங்கள் வரை பேச்சுக்கள் நீடித்தன.

கூட்டணித் தலைவர்கள் நேற்று மாலை இந்தியா பயணமாகினர். (அ-எ)

## ஜீ. சி. ஈ. உயர்தர பரீட்சை
## பிரவேசப் பத்திரம் கிடைக்காது பல பரீட்சார்த்திகள் அவதி

யாழ் மாவட்டத்தில் இருந்து ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் பலருக்கு இன்னும் பிரவேசப் பத்திரங்கள் வந்து சேரவில்லை.

தமது பிரவேசப் பத்திரங்களைப் பெறும் ஆவலுடன் நூற்றுக்கணக்கான பரீட்சார்த்திகள் யாழ். கல்வித் திணைக்களத்துக்கு தினமும் 'படை' எடுத்த வண்ணம் உள்ளனர்.

ஆனால் கல்வித் திணைக்கள அதிகாரிகள் கொழும்பில் உள்ள பரீட்சைத் திணைக்களத் தொலைபேசி இலக்கம் ஒன்றைக் கொடுத்து அதில் தொடர்பு கொண்டு விசாரிக்குமாறு கூறுவதாகப் பரீட்சார்த்திகள் கவலை தெரிவித்தனர். சில உத்தியோகத்தர்கள் கொழும்புக்கு நேரில் போய் விசாரித்து வருவது நல்லது என்றும் 'புத்திமதி' சொல்வதாகவும் அறிய வருகிறது.

பிரஸ்தாப பரீட்சை அடுத்த வாரம் ஆரம்பமாகிறது.

பிரவேசப் பத்திரங்கள் கிடைக்காத பரீட்சார்த்திகளின் விபரங்களை யாழ் கல்வித் திணைக்களம் சேகரித்து கொழும்பு பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அவற்றைத் தருவிக்க ஏற்பாடு செய்ய முடியாதா என்று பெற்றோர்கள் கேட்கிறார்கள். (அ-5)

## சுபநேரம்

25—07—1986
வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
06-02 முதல் 07-32 வரை
ராகுகாலம்:
10-32 முதல் 12-02 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## கொழும்பில் எர்ஷாத்

கொழும்பு, ஜூலை 25

பங்களாதேஷ் ஜனாதிபதி முகமது எர்ஷாத் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தார்.

நாளை சனிக்கிழமை அவர் பாகிஸ்தான் புறப்படுவார். (இ-எ)

## மாணவ, மாணவிகள் உட்பட 25 பேர் சென்ற படகு எங்கே?

### பரீட்சை எழுதவென்று திருமலை சென்றோருக்கு நடந்த கதி

திருகோணமலை, ஜூலை 25

மண்டைதீவில் இருந்து படகு மூலம் திருகோணமலை நோக்கிச் சென்ற சுமார் 25 பேரைக் காணவில்லை என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர்களுடன் வேறு இரண்டு படகுகளில் சென்ற சுமார் 60 தமிழ் பயணிகள் சுகமாக திருமலை போய்ச் சேர்ந்தனர்.

இது பற்றிய விவரம் வருமாறு!

திருமலை, சாம்பல்தீவு கல்விப் பகுதிகளைச் சேர்ந்த தமிழ் மாணவர், மாணவிகள் ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சைக்காக யாழ்ப்பாணம் வந்து தங்கி நின்று படித்து வந்தனர். இவர்களில் பலர் தனிப்பட்ட பரீட்சார்த்திகள்.

அடுத்த வாரம் மேற்படி பரீட்சை ஆரம்பமாகின்றது. இவர்களின் பரீட்சை நிலையங்கள் திருமலையில் உள்ளன.

ஆகவே பெற்றோர்கள் இவர்களை திருகோணமலைக்கு அழைத்துச் செல்ல வேண்டியிருந்தது.

தரை மார்க்கமாக போக முடியாத நிலையில் பெற்றோர்கள் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு முக்கோணத்தில் இருந்து படகுகள் மூலம் கடல் மார்க்கமாகச் சென்றனர்.

அப்படி பல பெற்றோர்கள் பிள்ளைகளுடன் இம் மாதம் 23 ஆம் திகதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு திருமலையிலும் துக்கம் அனுஷ்டிப்பு

திருகோணமலை, ஜூலை 25

மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களிலும் இன்று துக்க தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் பாடசாலைகளைப் பகிஷ்கரிக்கும்படி கோரும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

மட்டக்களப்புப் பகுதிகளிலும் துக்கதினம் அனுஷ்டிக்கும்படியும் பாடசாலைகளைப் பகிஷ்கரிக்கும்படியும் கோரும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. பின்னர் அதிரடிப் படைப் பொலிஸார் சுவரொட்டிகளை அகற்றிச் சென்றனர்.

இனந்தெரியாத இளைஞர்கள் நேற்று மட்டக்களப்பில் உள்ள அரச அலுவலகங்களுக்குச் சென்று வெள்ளிக்கிழமை அலுவலகங்களைப் பூட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டனராம். (இ-எ-150)

## யாழ் லொறி மதவாச்சியில் தாக்கப்பட்டது

யாழ்ப்பாணம் ஜூலை 25

புதன்கிழமை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற லொறி ஒன்று நேற்றுப் பிற்பகல் மதவாச்சிக்கு அருகில் ஆயுததாரிகளால் வழிமறிக்கப்பட்டது.

அந்த ஆயுததாரிகளினால் லொறியில் இருந்தவர்கள் தாக்கப்பட்டனர்.

இரண்டு தமிழர்கள் சத்திரசிகிச்சைக்காக வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (அ-எ)

## இராணுவ முகாமுக்கு அருகிலுள்ள பரீட்சை மண்டபங்கள் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

இராணுவ முகாம்களுக்கு அருகாமையில் உள்ள பாடசாலைகளின் ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சை மண்டபங்கள் இடம் மாற்றப்பட்டுள்ளன.

பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியின் முதலாம் இரண்டாம் பரீட்சை மண்டபங்கள் அல்வாய் சிறீ லங்கா மகா வித்தியாலயத்துக்கும்—

மூன்றாம் பரீட்சை மண்டபம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்துக்கும் இடம் மாற்றப்பட்டுள்ளன.

யாழ்-மத்திய கல்லூரி பரீட்சை மண்டபம் வண்ணார்பண்ணை நாவலர் பாடசாலைக்கும் வேம்படி மகளிர் கல்லூரி பரீட்சை மண்டபம் கன்னியர் மடம் மகா வித்தியாலயத்துக்கும் இடம் மாற்றம் செய்யப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையை பிரிக்க முடியாது என சுவரொட்டி

திருகோணமலை, ஜூலை 25

திருகோணமலையைப் பிரிக்க இடம் கொடுக்க மாட்டோம். அப்படி வந்தால் தரைமட்டமாக்குவோம்.

இப்படி சிங்கள மொழியில் எழுதப்பட்ட சுவரொட்டிகள் நேற்று திருமலை நகரில் காணப்பட்டன.

மீன் சந்தை, பஸ் நிலையம் ஆகிய பகுதிகளில் இச் சுவரொட்டிகள் காணப்பட்டன. (இ-எ-150)

## பொலன்னறுவையில் முதலாவது அகதி முகாம்

கொழும்பு, ஜூலை 25

பொலன்னறுவையில் முதலாவது அகதி முகாம் நேற்று திறக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை மெதிரிகிரியாப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 21 சிங்களவர்கள் மரணமானார்கள்.

அதைத் தொடர்ந்து மீகஸ்வெவ கிராமத்தில் இருந்து வெளியேறிய 200 சிங்களவர்களுக்காகவே பொலன்னறுவையில் அகதி முகாம் திறக்கப்பட்டுள்ளது.

இதனிடையில் மெதிரிகிரியாவில் ஆயுதப்படை முகாம் ஒன்றும் திறக்கப்பட்டுள்ளது (இ-எ-2)

### கொள்ளை

கல்முனை ஜூலை 25

பொத்துவில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அருகாமையிலுள்ள குளிர்பான ஏஜன்சி நிலையமொன்றினுள் ஆயுதபாணிகளாகப் புகுந்த இளைஞர் கோஷ்டி ஒன்று பணம், பொருட்கள் உட்பட ஒரு லட்சத்து அறுபதினாயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைச் சூறையாடிச் சென்றது. (இ-84)

இளைய தலைமுறையின் இதயம் வெல்லும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் தவணையும் முடிவடைகிறது:

# இலவசப்பாட நூல்கள் இன்னும் முழுமையாக வழங்கப்படவில்லை

## கல்விப் பணிப்பாளர் முறையீடு

யாழ்ப்பாணம், ஜூலை 25

பாடசாலைகளுக்கான இரண்டாந் தவணையும் முடிவடையப்போகிறது ஆனால் இன்னும் இலவச பாடநூல்கள் முழுமையாக வழங்கப்படவில்லை. இதனால் பெற்றோர், மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பாடநூல்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்கும்படி கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கல்வி அமைச்சின் செயலாளரைக் கேட்டுக்கொண்டார்.

இவ்வாண்டிறுதியில் வவுனியாவில் நடைபெற்ற சந்திப்பின்போதே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

தமிழ் மொழிபெயர்ப்பாளர்களும், அச்சகமுமின்மையே இத்தாமதத்திற்குக் காரணமென அச்செயலாளர் பதிலளித்தார்.

ஆகக் குறைந்தது புதிதாகச் சேர்க்கப்பட்ட பாட விதானங்களையாவது சிறுநூல்களாக முதலில் தந்து உதவுமாறு பணிப்பாளர் அமைச்சின் செயலாளரைக் கேட்டுக்கொண்டார். (இ-5)

## போஷாக்குணவுக் கருத்தரங்குகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

திட்டம் செயற்படுத்தும் அமைச்சின் உணவு போஷாக்குப் பிரிவின் அனுசரணையுடன் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நடைபெறும் வயது வந்தோர் போஷாக்குணவுக் கருத்தரங்குகள் ஆரம்பமாகியுள்ளன.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முதற்கட்டக் கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.

அடுத்த கட்டமாக பருத்தித்துறை, சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கருத்தரங்குகள் நடைபெறும்.

கிராமிய மட்டங்களிலான ஒருநாள் கருத்தரங்குகள் தெல்லிப்பழை, சாவகச்சேரி, கோப்பாய், சங்கானை, உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் மல்லாகம், இராசகிராமம், ஆவரங்கால், பொன்னாலை, குப்பிளான் ஆகிய கிராமங்களிலும் நடைபெறும்.

திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி சரோஜினி சிவேணந்திரன் இதனைத் தெரிவித்தார். (உ-5)

## குரல் கொடுப்பதற்கு எவரும் இல்லாததே அவலநிலைக்கு காரணம்

### கொள்ளைக் கண்டன கூட்டத்தில் உரை

கிளிநொச்சி, ஜூலை 25

கிளிநொச்சி மக்களின் இன்னல்களுக்குக் காரணம் இப்பகுதி மக்களுக்காகக் குரல் கொடுக்க எவரும் முன் வராததே ஆகும்.

கிளிநொச்சி, பரந்தன் றோட்டரிக் கழக உறுப்பினர் திரு. ப. வை. ஜெயபாலன் இப்படிக் கூறினார்.

முரசுமோட்டை, மூன்றும்வாய்க்கால் பகுதி மக்களால் நடத்தப்பட்ட கண்டன ஊர்வலத்தின் இறுதியில் முரசுமோட்டை முருகன் ஆலய முன்றலில் இப்பொதுக் கூட்டம் நடைபெற்றது.

கடந்த 20 ஆம் திகதி மூன்றும்வாய்க்கால் பகுதியில் ஒரே இரவில் சுமார் ஐந்து வீடுகளிலும், ஒரு வர்த்தக ஸ்தாபனத்திலும் ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்றினால் நடத்தப்பட்ட கொள்ளைகளைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது.

முரசுமோட்டை சாவமாதா கோயிலில் ஆரம்பிக்கப்பட்ட ஊர்வலம் 3 ஆம் வாய்க்கால் ஊடாக முரசுமோட்டை முருகன் ஆலயத்தை வந்தடைந்தது.

கூட்டத்திற்கு முரசுமோட்டை அத்தியாவசிய சேவைகள் கிளையைச் சேர்ந்த திரு. ஐ. நடராசா தலைமை வகித்தார்.

கூட்டத்தில் முரசுமோட்டையைச் சேர்ந்த பலரும் கொள்ளையைக் கண்டித்து உரையாற்றினர். (இ-76)

## திருமறை இல்லம் நாளை திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25

தென் இந்திய திருச்சபை யாழ் ஆதீனத்தின் திருமறை இல்லத் திறப்பு விழா நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் நடைபெறுகிறது.

நாளை மாலை 3.30 மணிக்கு அத்தியட்சர் அதிவண. டி. ஜே. அம்பலவாணர் திருமறை இல்லத்தைத் திறந்து வைப்பார். (இ)

## தமிழர் முஸ்லிம்கள் எவரும் இல்லை

கல்முனை, ஜூலை 25

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஹிங்குரானை சீனித் தொழிற்சாலையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றபோது தமிழ் முஸ்லிம்கள் எவரும் தெரிவு செய்யப்படவில்லை.

கைத்தொழில் நிறுவன பாதுகாப்பு அமைச்சின் அனுசரணையுடன் விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சு இந்த நியமனங்களை 200 சிங்களவருக்கு வழங்கியுள்ளது. (இ 81)

## ஆயரின் விருப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

தமிழ் மொழிக்குரிய அந்தஸ்து வழங்கப்பட்டு, இரு இன மக்கள் மத்தியிலும் நீதியும், சமாதானமும் நிலைநாட்டப்பட வேண்டும்.

இந்திய ராஜதந்திரி திரு. ஹார்டிப் பூரியிடம் யாழ் ஆயர் அதி வண. தியோகுப்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய மீனவர் கணபதியை அழைத்துச் செல்ல வந்திருந்த போது யாழ் ஆயர் இல்லம் சென்று ஆயரை சந்தித்திருந்தார். (இ-5)

## இலக்கிய சர்ச்சை புதுமையானது அல்ல

### கருத்தரங்கில் முருகையன்

யாழ்ப்பாணம், ஜூலை 25

தமிழர் சமுதாயத்துக்கும் தமிழ் மொழிக்கும் இலக்கியச் சர்ச்சை புதுமையானது அல்ல. ஆனால் நாம் இன்று இலக்கியத்துறையில் சில்லறைச் சர்ச்சைகளைத் தவிர்த்து நல்ல ஆரோக்கியமான சர்ச்சைகளை ஊக்குவிப்பது நலம்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க யாழ் கிளையின் ஆதரவில் 'இலக்கிய சர்ச்சைகள்' என்ற பொருளில் உரையாற்றிய கவிஞர் இ. முருகையன் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார். பேராசிரியர் நந்தி கருத்தரங்கிற்குத் தலைமை வகித்தார்.

கவிஞர் முருகையன் தொடர்ந்து கூறியதாவது:-

நக்கீரரும் சிவனும், புகழேந்தியும் ஒட்டக்கூத்தனும், கம்பனும் ஒளவையும் ஈடுபட்ட பல சர்ச்சைகளைத் தமிழ் மொழியில் காணமுடிகிறது.

விநோதரச மஞ்சரி என்ற நூலில் இது போன்ற சான்றுகள் உள்ளன.

எனவே இலக்கியச் சர்ச்சை தமிழுக்குப் புதிய துறை அல்ல.

மணிக்கொடி காலத்தில் 'பாரதி உலக மகாகவி அல்ல' என்பது பற்றி கல்கி, புதுமைப்பித்தன் ஆகியோருக்கு இடையே சர்ச்சைகள் இடம்பெற்றுள்ளன. அறிஞர் அண்ணாவுக்கும் பேராசிரியர் சேதுப்பிள்ளைக்கும் இடையே கம்பராமாயணம் பற்றி சர்ச்சைகள் நடைபெற்றிருக்கின்றன.

ஆனால் சில வேளைகளில் எழுத்தாளர்கள் தம்மை நிலைநாட்டி மேம்படுத்தி ஏனையோரை ஏளனஞ் செய்து சர்ச்சைகளில் ஈடுபடுகிறார்கள்.

இதனை எழுத்தாளர் வீம்பு என்றுதான் கூறலாம். இத்தகைய சர்ச்சைகள் நல்லதல்ல.

எனவே பரஸ்பர மதிப்புடன் எழுத்தாளர்களும் ஏனையோரும் உண்மையைத் தேடும் நோக்குடன் கருத்துக்களைப் பரிமாறுவது சனநாயக இலக்கிய சர்ச்சையாக அமைய முடியும். (இ-9)

## இறந்தோரில் 40 பேர்வரை அப்பாவிகள்: அடையாளம் காணப்படாமலே பல சடலங்கள் எரிக்கப்பட்டன

### கிளிநொச்சி பிரசைகள் குழு அறிக்கை

கிளிநொச்சி, ஜூலை 25

கிளிநொச்சியில் கடந்த மாதம் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 40க்கு மேற்பட்ட அப்பாவிகள் இறந்தனர். பலருடைய சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் விட்டு வைவுகளிலும் வீடுகளிலும் அடக்கம் செய்யப்பட்டன. சில சடலங்கள் எரிக்கப்பட்டன.

கிளிநொச்சி பிரசைகள் குழுவின் அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

சம்பவங்களின் போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து குழந்தைகள் ஷெல் தாக்குதலுக்கு இரையானார்கள்.

இதே போல பெற்ற தாயின் கண்முன் அண்ணன் தம்பி இருவர் திருநகரில் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

பரந்தனில் சமத்தில் வேலை செய்த ஒன்பது பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவை அனைத்தும் சீருடையினர் வேண்டுமென்று செய்த செயல்கள் ஆகும்.

ஆகவே இப் பாதகர்களின் பாவச் செயல்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

இப்படி அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

இந்தியத் தூதுவர், ஜனாதிபதி, தேசிய பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு இதன் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன.

அனுப்பி வைக்கப்படும் பகுதியுடன் கடந்த ஜூன் மாதம் இராணுவத்தினரால் கொல்லப்பட்டு அடையாளம் காணப்பட்டவர்களின் பெயர் விவரப் பட்டியல் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பெயர் விவரம் வருமாறு:-

எஸ். வேலாயுதம்பிள்ளை (கிராம சேவகர்) சி. எஸ். சிவஞானம் (கிராமிய வங்கி முகாமையாளர்) கோ. ஜெயராசா (தபால் சேவகர்) ஆர். சண்முகநாதன் (தபால் சேவகர்) ஆர். சௌந்தரராஜன் (நீர்ப்பாசன இலாகா ஊழியர்) எஸ். அருள்நாதன் (கச்சேரி சாரதி) எஸ். சௌந்தரராசா (சாரதி)

மைக்கல் ஞானப்பிரகாசம் (தென் இந்திய திருச்சபைப் போதகர்) கே. சண்முகம் (வர்த்தகர்) ஏ. சிலுவை (சமம்) கே. சின்னத்தம்பி (வியாபாரி) ஆர். சிவகுமார் (வியாபாரம்) ஆர். இராசமாணிக்கம் (விவசாயம்).

எஸ். சின்னத்துரை (மேசன்) எஸ். தியாகராசா (வர்த்தகர்) கோ. தவராசா (விவசாயம்) ஆர். இராமலிங்கம் (மெக்கானிக்) அ. அன்பழகன் (கூலியாள்) இ. கமலநாதன், இ. புஷ்பகாந்தன், இ. பாமாதேவி, இ. கிருபாராணி, இ. செந்திலநாதன் (ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பள்ளிக் குழந்தைகள்)

ஆ. சிவஞானசுந்தரம் (வர்த்தகர்) க. மகேஸ்வரன் (விவசாயம்) எம். உதயகுமரன் (விவசாயம்) வை. பாலசுப்பிரமணியம் (விவசாயம்) கா. சண்முகநாதன் (விவசாயம்) ந. நாராயணபிள்ளை (விவசாயம்) என். சத்தியசீலன் (விவசாயம்) ஜே. வின்சன் (விவசாயம்) (இ-76)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

பலாலியில் சுவீகரிக்கப்பட்ட

## 600 ஏக்கர் காணிகளுக்கான நஷ்ட ஈட்டு மதிப்பீடு பூர்த்தி

### பாதிக்கப்பட்டோருக்கு வேறு காணிகள் கிடைக்கலாம்

பலாலி, ஜூலை 25

பலாலி விமான நிலையத்தைச் சுற்றியுள்ள மக்களது 600 ஏக்கர் காணிகளுக்கான நஷ்ட ஈடு வழங்கும் மதிப்பீட்டு வேலைகள் முடிவடைந்துள்ளன.

யாழ் விலை மதிப்பீட்டுத் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்ட இடங்களுக்கு நேரடியாகச் சென்று மதிப்பீடுசெய்ய மறுத்திருந்தனர்.

குறிப்பிட்ட காணிகளை அளப்பதற்காகச் சென்ற நிலஅளவைத் திணைக்கள ஊழியர்களை நோக்கி இராணுவத்தினர் சுட்டதே இதற்குக் காரணமாகும்.

இதனை அடுத்து தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபரின் பணிமனையில் வைத்தே, காணிகளின் உரிமையாளர்கள் அழைக்கப்பட்டனர். நாளொன்றுக்கு இருபதுபேர் வீதம் விசாரிக்கப்பட்டு காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டது.

இவ்விதம் மயிலிட்டி தெற்கு மயிலிட்டி வடக்கு, பலாலி ஆகியஇடங்களைச் சேர்ந்த 500க்கு மேற்பட்டவர்களது காணிகளது பெறுமதிகள் மதிப்பிடப்பட்டன.

இதற்கான முழு ஒழுங்குகளையும் யாழ் இணைப்பு அதிகாரியும், மேலதிக உதவி அரசாங்க அதிபருமான திரு பாலசிங்கம் செய்திருந்தார்.

கடந்த 7ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட மதிப்பீடு முடிவுற 12 நாட்கள் எடுத்தன.

பாதிக்கப்பட்ட குடியிருப்பு நிலமற்றவர்களுக்கு வேறு அரசகாணிகள் வழங்கப்படவுள்ளன என்று அறியப்படுகின்றது. (இ-1.9)

## சேவாச்சிரமத்தில் பூசையும் வழிபாடும்

பருத்தித்துறை, ஜூலை 25

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் ஈழத் தமிழர்கள் படும் துன்பங்களைப் போக்க இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு விசேஷ பூஜையும், கூட்டு வழிபாடும் நடைபெறவுள்ளது.

இதற்கான சகல ஒழுங்குகளையும் சுவாமி சித்ரூபானந்தா மேற்கொண்டு வருகிறார். (இ-118)

## ஆரம்ப வகுப்பு ஆசிரியர் பொறுப்பு முக்கியமானது

### கல்விப்பணிப்பாளர் கூறுகிறார்

மானிப்பாய், ஜூலை 25

கல்வியை வளர்த்துக்கொள்ள அடிப்படை ஆரம்பக்கல்வி ஸ்திரமாக அமைய வேண்டும். எனவேதான் ஆரம்ப வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் பொறுப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இவ்வாறு கூறினார் யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம்.

சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த மெய்வல்லுனர் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

அவர் மேலும் பேசுகையில் கிராமங்களின் முன்னேற்றத்துக்கு விளையாட்டுப்போட்டிகள் அவசியமானவை.

பாடசாலை அதிபர் திரு. எஸ். சண்முகலிங்கம், விழாவுக்குத் தலைமை வகித்தார்.

மானிப்பாய் வட்டாரக்கல்வியதிகாரி திரு சதனஞ்செயன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

அவர் தமது உரையில், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, ஒழுக்கம் நிறைந்தவர்களாக இளைஞர்கள் திகழ்வது இன்றைய காலகட்டத்தில் அவசியமானது என்றார்.

திரு. எஸ். அருணாசலம், இடைக்காடு மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். பூபாலசிங்கம் ஆகியோரும் பாடசாலை ஸ்தாபகர் நினைவுரையாற்றினர்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் திரு. வி. எஸ். சிவபாலசிங்கம், உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு அதிகாரி திருமதி. வ. கௌரீஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

விளையாட்டுக்களில் வெற்றியீட்டிய பிள்ளைகளுக்கு திருமதி கே. சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்கினார். (இ-90)

## ஹர்த்தால், ஆர்ப்பாட்டத்தால் அரசை அசைக்க முடியாது என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை 25

ஹர்த்தால், ஆர்ப்பாட்டங்களினால் அரசாங்கத்தை ஒன்றுமே செய்ய முடியாது. இனப்பிரச்சினை சம்பந்தமாக அரசு ஒரு முடிவு எடுத்தால் அதனை நிறைவேற்றியே தீரும்.

இப்படிச் சொன்னார் ஜனாதிபதி ஜெயவர்த்தன.

இரத்தினபுரி சங்கராஜ சிறி சுகாராம விகாரையில் நடந்த கூட்டத்தில் மேலும் பேசுகையில் ஜனாதிபதி சொன்னதாவது:

விசேடமாக மலையகத்தில் வாழும் தமிழர் மத்தியில் புத்த தர்மத்தைப் பற்றி மகாசங்கம் போதனை செய்ய வேண்டும்.

வன்செயல், தீவிரவாதம் ஆகியவற்றை ஒழிக்கவும் கொலைகளை நிறுத்தவும் இப்பிரசாரங்கள் உதவும்.

இப்படி ஜனாதிபதி சொன்னார். (இ-ஏ)

## பாடசாலை வளர்ச்சியில் பொருட்காட்சியும் ஒரு முக்கிய நிகழ்ச்சி

நீர்வேலி, ஜூலை 25

பாடசாலை வளர்ச்சிக்குப் பொருட்காட்சியும் முக்கிய நிகழ்ச்சியே.

நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற கல்வி அபிவிருத்திப் பொருட்காட்சியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய கோப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி திரு ஆ. வ. தங்கராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு த. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்ற இப்பொருட்காட்சி விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில்; பாடசாலையின் வளர்ச்சிக்கு விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா என்பன எப்படி முக்கியமான நிகழ்ச்சியாக அமைகின்றனவோ அவற்றைப் போலப் பொருட்காட்சியும் ஒரு முக்கியமான நிகழ்ச்சியே எனக் கூறினார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் த. பரராஜசிங்கம் பேசுகையில், கல்வித்துறையில் மட்டுமன்றி ஏனைய துறைகளிலும் மாணவர்களை முன்னேடிகளாக்குவதற்கு ஆசிரியர்கள் அக்கறையுடன் தொழிற்பட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

பிரிவுத் தலைவர் பொ. த. இராசா ஆசிரியர் நன்றி கூறினார். (இ-110)

## கருத்தரங்கு

வேலணை, ஜூலை 25

தீவுப்பகுதி எழுத்தாளர் சங்கத்தினரால் மாதாமாதம் நடத்தப்பட்டு வரும் தீவக எழுத்தாளர் சங்கத்தின் கருத்தரங்கு சென்ற 5 ஆம் திகதி சனிக்கிழமை கவிஞர் தில்லைச்சிவன் தலைமையில் வேலணை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் காரம்பன் சண்முகநாதன் மகாவித்தியாலய அதிபர் திரு. ஆ. சபாரத்தினம் 'தீவுப்பகுதி இலக்கிய வளர்ச்சி' என்னும் தலைப்பில் கலந்துரையாடல் நடத்தினார்.

இக்கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை சரவணையூர் மணிசேகரன் செய்திருந்தார். (இ)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 25

வட இலங்கை சங்கீத சபையின் நிர்வாகச் செயலாளராகக் கடந்த 15 வருடங்களாகக் கடமை புரிந்த கு. பொன்னம்பலத்துக்குப் பாராட்டு விழா நடத்தப்படவுள்ளது. (இ-5)

## ஜே. ஆரின் இயலாமை குறித்து இந்து நாளிதழ்

புதுடில்லி, ஜூலை 24

தமிழர் மீதான அண்மைக்கால வன்செயல்கள் குறித்து ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டபோது, அவர் முதலில் வருத்தம் தெரிவித்தார்; பின்னர் ஒன்றும் செய்யமுடியாத நிலையில் இருப்பதைத் தெரிவித்தார்.

இப்படி 'இந்து' நாளிதழ் இலங்கை வட்டாரங்களை ஆதாரம் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

இது அரச படைகளின் சில பிரிவுகள் அவரின் கட்டுப்பாட்டையும் மீறிச் செயல்படுவதைக் காட்டுவதாக உள்ளது.

ஜெயவர்த்தனவின் அரசுக்குள்ளும் எதிர்க்கட்சிகளுக்குள்ளும் இருக்கும் ஜெயவர்த்தனவுக்கு எதிரான சக்திகள் செய்யும் சதி என்பது புதுடில்லிக்கு நன்றாகத் தெரியும்.

இலங்கை அரசபடைகளுக்குள் உள்ள சில சக்திகள் இராணுவத் தீர்வு ஒன்றை அடைவதில்தான் இன்னும் ஆர்வம் காட்டி வருகின்றனர். அவர்கள் புதிய வன்செயல்களுக்கு உற்சாகமளிக்கின்றனர்.

சட்டம், ஒழுங்கு, காணிக்குடியமர்வு ஆகியன குறித்த அதிகாரப் பகிர்வு, வடக்கு-கிழக்கு இணைப்பு ஆகியவை சம்பந்தமாக ஏதாவது ஓரளவிலான உடன்பாடு காணப்படுவதை திரு. ஜெயவர்த்தன வெளிப்படையாக எதிர்க்காததும் அரசில் உள்ள கடும் போக்குக்காரர்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தி உள்ளது.

சிங்களக் கடும் போக்குக்காரர்களினாலும் தமிழ்ப் போராளிகளினாலும் தற்போது இடம்பெறும் அரசு—கூட்டணிப் பேச்சுக்கள் முறிவதை இந்தியா விரும்பவில்லை. (இ-ஏ-2)

## மினிபஸ் சேவை பஞ்சாயத்துச் சபை நிர்வாகிகள்

மக்கள் முகம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

வட பிராந்திய மினிபஸ் சேவைச் சங்கங்களின் பஞ்சாயத்துச் சபைத் தேர்தல்கள் கடந்த வெள்ளிக்கிழமை நடந்தன.

புதிய நிர்வாகிகள் தெரிவு வருமாறு:

தலைவர்: பொன். மதிமுகராசா; செயலதிபர்: இ. செல்வராஜா; பொருளாளர்: ஏ. தியாகராஜா; உபதலைவர்: மூ. சிவராஜா; உபசெயலாளர்: ஏ. கனகசபை.

நிர்வாக சபை: எஸ். சிவராசா, எஸ். அரசலிங்கம், ஐ. காலிங்கநடனம், செ. மகாதேவன், செ. கேசவரத்தினம், வீ. நாகேந்திரன், பொ. தம்பித்துரை, த. அ. தம்பித்துரை, கு. விமலதாஸ், இ. ஜே. அற்புதநாதன், ஆ. சுரேஷ்குமார், வி. குமாரசாமி. (இ-ஏ)

## ஓய்வு பெற்றார்

புங்குடுதீவு, ஜூலை 25

புங்குடுதீவு, குறிகாட்டுவான் அரசினர் தமிழ் வித்தியாலயத்தின் அதிபராகக் கடந்த பல ஆண்டுகளாகப் பணியாற்றிய திரு சி. இரத்தினசபாபதி தமது அறுபதாவது வயதில் சேவையிலிருந்தும் ஓய்வு பெற்றார்.

இவரது இடத்திற்குப் புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் வித்தியாலயத்தில் பணியாற்றிய ஆசிரியர் திரு க. தவராசா பதில் அதிபராக நியமிக்கப்பட்டார். (இ-131)

## பாடசாலைக்கு தளபாடங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25

சங்கானை ஸ்தான அமெரிக்க மிஷன் பாடசாலைக்கு 15,000 ரூபா பெறுமதியான பாடசாலைத் தளபாடங்களை சங்கானை மத்திய கிராம அபிவிருத்திச் சங்கம் அன்பளிப்புச் செய்தது.

இது சம்பந்தமான நிகழ்ச்சிக்கு பாடசாலை அதிபர் தலைமை வகித்தார்.

இக் கூட்டத்தில் உதவி அரச அதிபர் பணிமனை நிர்வாக அதிகாரி திரு. இ. பாலசிங்கம், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பொ. சிவானந்தம் ஆகியோரும் பேசினர். (இ.ஏ)

## அன்பளிப்பு

நெடுங்கேணி, ஜூலை 25

நெடுங்கேணி ஆகார வைத்தியசாலைக்கு மின் அடுப்பு இல்லாத குறை நீக்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணி தபால் அதிபர்களும் ஊழியர்களும் ஒரு மின் அடுப்பை வைத்தியசாலை பொறுப்பதிகாரியிடம் கையளித்தனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

விடாமுயற்சியும் உறுதியும் உடையவருக்கு எதுவும் அரிதில்லை.

— லூான் - யூ

உதயன்

உண்மை - விருப்பு வெறுப்பின்மை - நடுநிலைமை

இல, 15 2வது ஒழுங்கை, தொலைபேசி 24803
கின்சார நிலைய வீதி, 23073
யாழ்ப்பாணம் 25-07-86 க.பெ 23

## பந்து இப்போது போராளிகள் பக்கம்

தமிழர் பிரச்சினைக்குரிய தீர்வு முயற்சியில் முக்கிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. நியாயமான— எல்லோரும் ஏற்கக்கூடிய உகந்த தீர்வு ஒன்றைக் கண்டறிவதில் – உருவாக்குவதில் தமிழ்ப் போராளிகளையும் சேர்த்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அரசாங்கம் கூட்டிய அரசியல் கட்சிகள் மாநாட்டின் முடிவில், இனப்பிரச்சினைத் தீர்வுக்குரிய யோசனைகளை, தமிழ்ப் போராளிகள் அமைப்புகளிடமும் பெறுவது என்று ஏகமனதாக இணக்கப்பட்டிருக்கிறது.

அரசு சமர்ப்பித்த திட்டத்தை அடிப்படையாக வைத்துத் தயாரிக்கப்பட்ட சிபார்சுகளை, தமிழர் அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே அமுல் செய்வது என்றும் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

அரசாங்கம் தென்னிலங்கைக் கட்சிகளின் அனுசரணையோடு முன் வைக்கும் திட்டத்தை தமிழ் மக்களின் அமைப்புகள் ஆராயவும், அதற்கு திருத்தங்கள், மாற்றங்களைத் தெரிவிக்கவும், வேண்டுமானால் தமது கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட புதிய திட்டத்தை முன் வைக்கவும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்ப் போராளிகளின் யோசனையையும், பங்களிப்பையும் பெறத் தீர்மானிக்கப்பட்டிருப்பது பெரும் திருப்பம் என்றே கொள்ள வேண்டும்.

1985 இல் திம்புவில் நடந்த மாநாட்டில் போராளிகள் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். ஆனால் அது முறிந்த பின்னர், போராளிகளுடன் பேசத் தேவையில்லை என்ற தொனியில் அரசு நடந்து வந்தது; சொல்லியும் வந்தது.

போராளிகளைக் கலந்தாலோசித்துத்தான் இறுதித் தீர்வு ஒன்றை வகுக்க வேண்டும் என்ற அளவுக்கு அரசு மனம்மாறி — படி இறங்கி வந்திருப்பது நல்ல சகுனம். உண்மை நிலையை — யதார்த்த நிலையை அது இப்போதாவது புரிந்து கொண்டது நன்று.

தமிழ்ப் போராளிகளை ஆயுதம் ஏந்த வைத்த சூழ்நிலையும், பின்னணியும் எல்லோருக்கும் தெரியும். எனினும் அவர்கள் பேச்சுவார்த்தை மூலம் ஒரு தீர்வைக்கான பின் நின்றது இல்லை.

அரசியல் கட்சி மாநாடு தொடங்கிய ஒரு மாத காலத்தில் போராளிகள் தலைவர்கள் சர்வதேச பத்திரிகைகளுக்கும் அளித்த செவ்விகள் அவர்கள் திறந்த மனத்தை எடுத்தியம்பின.

எனவே பிரச்சினைக்கு உரிய தீர்வைக் காண்பதில் அவர்கள் தமது பங்களிப்பை வேண்டிய அளவில் செலுத்துவார்கள் என்பதில் தமிழ் மக்களுக்குச் சந்தேகம் இல்லை.

தமிழ் மக்கள் இனியாவது சுதந்திர புருஷர்களாக, தம்மைத் தாமே ஆண்டு, தமது தாயகத்தையும் பேணி வளர்த்து, வளமாக்கக் கூடிய விதத்தில் உரிய ஒரு தீர்வைத்தான் போராளிகள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையும் தமிழ் மக்களிடம் உண்டு.

தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் புரிந்து கொண்டு, அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு என்றே தம்மை அர்ப்பணித்த தியாகிகள் எமது இளைஞர்கள்.

பந்து இப்போது அவர்கள் பக்கம் போடப்பட்டிருக்கிறது அதனைத் தக்கபடி அடித்து வெற்றிப் புள்ளிகளைப் பெற வேண்டிய பெரும் பொறுப்பு அவர்களிடம் தானாகவே வந்து சேர்ந்துள்ளது.

கிடைத்த சந்தர்ப்பம், ஏதாவது சாதகம் செய்யுமா என்று முயற்சித்துப் பார்ப்பதில் தப்பு இல்லை அவ்வாறு செய்வதால் இலட்சியப் பயணத்தை இடை நிறுத்த வேண்டும் என்பதும் இல்லை அல்லவா?

மிக அவதானத்துடனும், மதி நுட்பத்துடனும், பொறுப்பு உணர்ச்சியுடனும், தந்திரோபாயத்துடனும் தீர்க்க தரிசனத்துடனும் செயற்பட வேண்டிய வேளை இது.

தமிழர் உரிமைகளைச் சமாதான முறையில் பெறுவதற்கு, பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு போராளிகள் எப்போதும் தயாராகவே இருக்கிறார்கள் என்பதை உலகத்துக்கு மீண்டும் ஒரு முறை எடுத்துக் காட்டவும் இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

சந்தர்ப்பம் கிடைத்தது என்பதற்காக அரசின் வலையில் விழவோ அல்லது இலட்சியத்தைக் கைவிடவேண்டும் என்றோ அல்லது மக்கள் உரிமைகளை விற்க வேண்டும் என்றோ அவசியம் இல்லை

தமிழ் இன ஒழிப்பை அரசு நிறுத்த வேண்டும்; படைகள் முகாம்களுக்குள் ஒடுங்க வேண்டும்; உணவுப் பொருள் வாங்க வரும் போது கூட ஆயுதங்களை வைத்துவிட்டு வர வேண்டும்; சோதனைகள் தேடுதல்கள் என்ற இம்சை நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்; பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்க வேண்டும் என்பன போன்ற நிபந்தனைகளை முன் வைத்தும் பேச்சுக்குப் போகலாம்.

தமிழ் மக்களையும், போராளிகளையும் தொல்லைப் படுத்தாத ஒரு சூழ்நிலையை உருவாக்க அரசு ஒப்புக் கொண்டால் பேச்சுக்குப் போகலாம்.

போராளிகளே, பந்து உங்கள் பக்கம். நுட்பமாக, நிதானமாக விளையாடி வெற்றி காண முயற்சியுங்கள்.

உங்கள் முக்கியத்துவத்தை, அவசியத்தை, தீர்வுக்கு வேண்டிய உங்கள் பங்களிப்பை அரசு உணர்ந்திருக்கிறது. அதுவே உங்கள் வெற்றியின் முதற்படி என்று கருதிச் செயற்படுங்கள்.

# இந்திய-சீன எல்லைப் பேச்சு

## தொடர்ந்து இழுபறி

பீகிங், ஜூலை 24

இந்திய– சீன எல்லைப் பிரச்சினை பற்றிய ஏழாவது சுற்றுப்பேச்சுக்களும் வழமைபோலவே எவ்வித முடிவும் இல்லாமல் முற்றுப்பெற்றன

இப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்ட இருதரப்பினரும் விஷயங்களை முன்னைவிட நன்கு புரிந்துள்ளனர் என்றும் ஆனால் எல்லைப்பிரச்சினையில் சுமுகமான தீர்வு காண முடியவில்லை என்றும் சீனாவிலிருந்து வெளியான அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அருணாசல் பிரதேசத்தில் அண்மையில் சீனர்களின் ஊடுருவல் குறித்தும் தீவிர கருத்துப் பரிவர்த்தனைகள் நடந்தன

கலாசாரம், விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப பரிவர்த்தனை தொடர்பாகவும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன என்று இந்திய குழுவின் தலைவர் திரு ஏ பி வெங்கடேஸ்வரன் தெரிவித்தார் (இ-ஒ)

## பெரஸ் - ஹசன் சந்திப்பு தோல்வியில்

ராபட் ஜூலை 24

மேற்காசிய அமைதித் தீர்வுபற்றி இஸ்ரவேல் பிரதமர் திரு சிமோன் பெரஸுடன் தாம் நடத்திய பேச்சுக்களினால் முன்னேற்றம் எதையும் அடைய முடியவில்லை என மொரோக்கோ மன்னர் ஹசன் தெரிவித்தார்.

மொரோக்கோவின் ஓய்வு ஸ்தலமான ஏஃரானில் இப்பேச்சுவார்த்தைகள் இரு தினங்களாக நடைபெற்றன.

பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்தை அங்கீகரிக்கவும் ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களிலிருந்து விலகிக் கொள்ளவும் இஸ்ரவேல் மறுத்துள்ளது

பேச்சுக்களில் தோல்வி ஏற்பட்டபொழுதும் இஸ்ரவேலின் நிலையை மற்ற அரபு நாடுகளின் தலைவர்களிடம் தெரிவிக்கவுள்ளதாக மன்னர் ஹசன் தெரிவித்தார்

இஸ்ரவேல் பிரதமர் திரு பெரஸ் தற்பொழுது ஜெருசலம் திரும்பியுள்ளார்

இப் பேச்சுவார்த்தை கள் 1982ஆம் ஆண்டின் அரபு பிராந்திய சமாதான உடன்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருந்தன என மேலும் மன்னர் ஹசன் அறிவித்தார். (இ-ஒ)

## வெளி உலகில்

### மறியல் போராட்டம்

தட்சரத தென் ஆபிரிக்கக் கொள்கைக்கு லண்டனிலும் எதிர்ப்பிருப்பதை உலகத் தலைவர்களுக்குக் காட்டும் வகையில் மறியல் போராட்டமொன்றை அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள காமன்வெல்த் மாநாட்டில் நடத்துவதென லண்டன் தொழிற்சங்கச் சம்மேளனம் தெரிவித்துள்ளது

### ஒப்பந்தம்

அல்ஜீரியா இந்தியாவிற்கு சுமார் 200 கோடி ரூபா செலவிலான தொழில் திட்டங்களுக்கான ஒப்பந்தம் ஒன்றை அளிக்க விருப்பம் தெரிவித்துள்ளது. (இ-ஒ)

### புதிய திட்டம்

விளையாட்டு மருத்துவ ஆராய்ச்சிக்கான புதிய திட்டமொன்றை அறிமுகப்படுத்தச் சென்னை மருத்துவக் கல்லூரி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது

### உப்புத்தொழிலில் ஊக்கம்

1990 ஆம் ஆண்டுக்குள் சமையல் உப்பு முழுவதும் அயோடின் சத்துக் கொண்டுள்ளதாக அமைய வேண்டும் என மத்திய அரசு அறிவித்துள்ளதால் தமிழ் நாட்டில் உப்பு அடிப்படைத் தொழில்களை ஆரம்பிக்க வெளிநாட்டவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.

### கடனுதவி

சுயவேலைத் வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அடிமட்டத் தொழில் புரிபவர்களுக்குக் கடனுதவி வழங்க இந்திய ரிசேர்வ் வங்கி முடிவு செய்துள்ளது

### சிங்களவரும் அகதிகள்

இதுவரை இலங்கைத் தமிழர்கள் மட்டும் அகதிகளாகும் நிலையிலிருந்து இன்று சிங்களரும் அகதிகளாகும் நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை இந்திய வர்த்தகர் சபைத்தின் 8 வது வருடாந்த மாநாட்டைச் சென்னையில் தொடக்கி வைத்த இலங்கை அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

### தலைவர்கள் வாழ்க்கை படமாகின்றது

தமிழ் நாடு சுதந்திரப் போராட்ட வீரரான திரு சத்தியமூர்த்தி உட்படத் தேசியத் தலைவர்களான கமலா நேரு அம்பேத்கார், முகமத் அலி ஜின்னா ஆகியோரது வாழ்க்கை வரலாறுகள் செய்தித் திரைப்படமாக உருப்பெறுகின்றன.

### பிரி. பிரதமர் கோஷம்

எலிஸபெத் மகாராணியின் இரண்டாவது மகன் அன்ரூவின் திருமணத்தில் கலந்து கொள்ள வந்திருந்த பிரிட்டிஷ் பிரதமர் தட்சரையும் அவரது கணவர் டெனிஸ் தட்சரையும் தென் ஆபிரிக்கா மீது பொருளாதாரத் தடைகளை நிர்ப்பந்திக்குமாறு பார்வையாளர்கள் கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்

### சந்திப்பு

பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் ஸார் ஜெப்ரி ஹே வ் தென் ஆபிரிக்கா ஜனாதிபதி போதாவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

காமன்வெல்த் விளையாட்டு:

## 34 நாடுகள் பகிஷ்கரித்தன

### எடின்பரோவில் போட்டி ஆரம்பம்

எடின்பரோ, ஜூலை 24

13 ஆவது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் இன்று ஸ்கொட்லாண்டின் பிரதான பட்டினமான எடின்பரோவில் ஆரம்பமாகின.

34 நாடுகள் போட்டியைப் பகிஷ்கரிக்கின்றன

பிரிட்டனின் மிகப் பழைய காலனியான பெல்டோவும் விளையாட்டுக்களைப் புறக்கணிக்கும் நாடுகள் வரிசையில் சேர்ந்துள்ளது

தற்பொழுது காமன்வெல்த் போட்டியில் வெள்ளையர் நாடுகள் மட்டுமே கலந்து கொள்ளும். இந்த விளையாட்டுக்களில் மொத்தம் சுமார் 6600 விளையாட்டு வீரர்கள் பங்குபற்றுகின்றார்கள்.

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாகிரட் தட்சரை வைபவத்தில் கலந்து கொள்ளாமல் தடுத்து அவருக்கு விடுத்த அழைப்பை வாபஸ் பெறும் தீர்மானத்தை நேற்று எடின்பரோ மாவட்ட விளையாட்டுச் சபை ஆமோதித்தது.

இச்சபை எதிர்க்கட்சியான தொழிற்கட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. (இ-ஒ)

## நில அதிர்வுகள் மூலம் நடவடிக்கைகள் ஊர்ஜிதம்

மாஸ்கோ, ஜூலை.24

அணு ஆயுத பரிசோதனை தடுப்பு நடவடிக்கைகளை நில அதிர்வுகள் மூலம் ஊர்ஜிதப் படுத்துவதற்கான சர்வதேச முறையொன்று வேண்டும்.

இவ்வாறு ரஷ்யா வெளியிட்ட அறிக்கையொன்றில் தகவல் வெளியாகியுள்ளது.

அணு இயல் வெடிப்பு சோதனைகள் கண்காணிக்கப்பட வேண்டும் என அமெரிக்கா வற்புறுத்தி வந்ததும் அது பற்றி மட்டுமே விவாதிக்க விரும்பியதும் கடந்த மார்ச் மாதம் நடைபெற இருந்த இரு நாடுகளுக்கான பேச்சு வார்த்தைகளை நடத்த முடியாமல் போனது.

ஆனால் அந்த இரு நிலைகளிலிருந்தும் அமெரிக்கா தனது போக்கை மாற்றியுள்ளதால் சுமுகமான ஒருசூழ்நிலை தற்பொழுது உருவாகியுள்ளது.

இவ்வாறு மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஒ)

### குமுறும் எரிமலை

கடந்த வருடம் நவம்பர் மாதம் 23 ஆயிரம் மக்களைப் பலிகொண்ட கொலம்பியாவின் நெவாடொ டெல் ருய்ஸ் என்ற எரிமலை மீண்டும் குமுறுவதாக அறிவிக்கப்பட்டது.

இதனால் பலத்த சத்தமும் உச்சியிலிருந்து 4000 மீட்டர் உயரத்துக்குப் புகையும் சாம்பலும் கிளம்பின.

# மகிழ்ச்சிக்கும் அமைதிக்கும்

## இந்துமதம்

மனிதனுடைய வாழ்க்கை முறையில் ஏற்படும் மாற்றங்களில் மதம் ஓர் முக்கிய இடத்தை வகிக்கிறது அந்த வகையில் நான் ஆணித்தரமாக தேர்ந்தெடுப்பது 'இந்துமதம்' ஒன்றைத்தான். இந்து மதம், பிரபஞ்சத்தின் அளவை தன்னுள் வைத்து அளவிலா பொக்கிஷத்தை இவ்வுலகிற்கு அளிக்கும் ஒரு பழமையான மதம் இன்று விஞ்ஞானத்தின் உயர்வைக் கண்ட ஆணவத்தால் மனிதன் அகிலத்தை ஆட்டிப் படைப்பதாக கனவு காண்கிறான். ஆனால் விஞ்ஞானத்தின் விளக்கத்தை மெய்ஞானம் கொண்டு அன்றே நமக்கு எடுத்

ஞானக்கதிர்

துரைத்தது இந்துமதம். நான் ஆசைகளால் அலைக்கழிவுற்று மனச்சோர்வு அடைந்தபோது மனம் சாந்தியடைய ஏங்கித் தவித்தபோது 'தியானம்' என்றபெரும் சொற்பொழிவை என்னுள் நிகழ்த்தி மனவலிமையை உண்டாக்கியது இந்துமதம். ஆகவே மகிழ்ச்சியுடனும் அமை

எழும் ஏக்கங்களும் முடிவுறுவதோடு மாமனித நிலைக்கு நாம் உயர்கிறோம்.' என்று நீண்டதொரு விளக்கத்தை



என் மனதில் என்றும் நிலைபெறச் செய்கிறது.

'எப்பொழுது நிகழும் என்று நிச்சயமில்லாத போராட்டங்கள் நிறைந்த பயனற்ற இடைவேளை தான் வாழ்க்கையா!'' என்று மனச்சோர்வு அடையும்போது 'நாம் வேறு - நம் உடல் வேறு ஆன்மாவே நாம் - உலக வாழ்க்கையின் எல்லை வரை தான் இவ்வுடல் துன்பத்தை அனுபவிக்கிறது'' என்று வாழ்வின் ரகசியத்தை இந்துமதம் தெளிந்த நிலையில் எனக்கு விளக்குகிறது ஆதலால் அளவற்ற பக்திகொண்டு இந்த மதத்தில் உருகுகிறேன்

இவ்வாறு மனிதனின் ஒவ்வொரு அசைவிலும் வாழ்க்கை முறைகளிலும் ஒரு தெய்வத் தன்

எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தியுடனும் இந்த மதத்தை நேசிக்கின்றேன்.

இந்துமதம் மனிதனுள் இருக்கும் தெய்வத் தன்மையை வெளிப்படுத்துகிறது. 'நாமே நம்முடைய குறைகள் எல்லாவற்றிற்கும் பொறுப்பாளிகள். நாம் உண்மையில் யார் என்பதைக் கண்டு கொள்ளும்போது நம்முடைய குழப்பங்களும், குறைபாடுகளும்

மையை உண்டாக்கி நாமே கோயிலாகவும், நம் ஆன்மா பரம்பொருளாகவும் இணைந்த ஒரு பெரும் உபதேசத்தை, நீண்டதொரு மன அமைதியை இந்துமதம் என்னுள் ஏற்படுத்துகிறது

மேலும் மனம் என்ற ஓர் எதிரியை என்னுள் [illegible]

என்னுள் இசைக்கச்செய்கிறது ஆதலால் 'இந்து' என்ற சொல்லில் என்னுள் [illegible] நிலைத்திருக்கும் [illegible] பிரார்த்திக்கின்றேன். *

# இதுவரை அனுபவித்த துன்பங்களுக்கு ஈடுசெய்யும் தீர்வே தமிழருக்கு வேண்டும்

## அமிர்தலிங்கம் கூறுகிறார்

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு அ. அமிர்தலிங்கம் கொழும்பு ஆங்கில நாளிதழ் 'டெய்லி நியூஸ்'ஸுக்கு அளித்த பேட்டியின் இறுதிப் பகுதி இன்று இங்கு பிரசுரமாகின்றது. பேட்டி கண்டவர்: வி. சபாரத்தினம்.

கேள்வி: அதிகாரப் பகிர்வின்கீழ் வரும் விஷயங்கள் குறித்து பேசினீர்களா?

அமிர்: இது ஒரு விரிவான விஷயம். விரைவில் இவைபற்றிப் பேசுவோம்.

கேள்வி: அரசு— கூட்டணி காணும் தீர்வுக்கு இணங்க போராளிகள் செயல்படுவார்களா? என்பதுதான் மக்களை கவலை கொள்ளச் செய்யும் பெரிய கேள்வியாகும். இதுபற்றிய உங்கள் மதிப்பீடு என்ன?

அமிர்: பெரும்பான்மையான தமிழர் ஏற்றுக் கொள்ளக் கூடியதான தீர்வு காணப்பட்டு, ஏற்றுக் கொள்ளப் பட்டால் அத்தீர்வை அமுல் நடத்துவதற்கு முட்டுக் கட்டையாக இருக்க மாட்டோம் என்று போராளித் தலைவர்கள் உணர்த்தியிருக்கின்றனர்.

100 சதவீத ஆதரவு இவ்விஷயத்தில் கிடையாமல் போகலாம். ஆனால் பெரும்பான்மையானவர்கள் ஏற்றுக் கொள்வர் என்றெண்ணுகின்றேன்

கேள்வி: தமிழீழ விடுதலைப் புலிகளும் ஏற்றுக் கொள்வார்களா?

அமிர்: பெரும்பான்மைத் தமிழ் மக்களைத் திருப்தி செய்யும் எந்தத் தீர்வையும் ஏற்போம் என்று இந்திய சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சாளர் கூறியுள்ளார்.

கேள்வி: மக்களின் மனநிலை எப்படி உண்டு? தீர்வு ஒன்றை ஆவலோடு அவர்கள் எதிர்பார்க்கிறார்களா?

அமிர்: தமிழரா, சிங்களவரா?

கேள்வி: இரு தரப்பினரும் தான்

அமிர்: தமிழர்கள் இன்று பெரும் கஷ்டப் படுகின்றனர். இக்கஷ்டங்களில் இருந்து நீங்க அவர்கள் விரும்புகிறார்கள் தீர்வு ஒன்று கஷ்டங்களுக்கு நிவாரணம் வழங்கும் என்றால் அவர்கள் அதை வரவேற்பர். அதன் கருத்து அவர்கள் எப்படியும் தீர்வு ஒன்றைக் காணவேண்டும் என்று விரும்பவில்லை.

இதுவரை காலமும் அனுபவித்து வந்த துன்பங்களுக்கு ஈடு செய்யும் வகையிலான தீர்வு ஒன்றையே தமிழ் மக்கள் விரும்புகின்றனர்.

அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தும் தீர்வும் கௌரவத்துடன் கூடிய சமாதானமுமே தமிழர் விரும்புவது பெரும்பான்மையான சிங்களவரும் தீர்வையே விரும்புகின்றனர் என்பது எனது மதிப்பீடு.

இந்த மதிப்பீட்டில் தான் இங்கு வந்து நாம் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளோம்.

கேள்வி: சுதந்திரக் கட்சியின் நிலைபற்றி என்ன கூறுகின்றீர்கள்?

அமிர்: சுதந்திரக் கட்சிஎடுத்து உள்ள இந்த நிலை துரதிருஷ்டவசமானது. கடந்த 3 தசாப்தங்களாக சிங்கள அரசியல் கட்சிகள் கடைப்பிடித்து வரும் பாரம்பரிய வழக்கம் இது.

இனப்பிரச்சினைக்கு பதவியில் இருக்கும் அரசு நடவடிக்கை எடுக்கும் போது எதிர்க் கட்சிகள் சிங்கள இனவெறியைக் கிளப்பி சிங்கள மக்களின் ஆதரவை பெறுவது தான் வழக்கம்.

இன்றைய நெருக்கடிக்கு எதிர்க் கட்சிகளின் இந்த அணுகு முறைதான் காரணம்.

இன்றைய நெருக்கடி காலகட்டத்திலும் கூட பெரிய எதிர்க்கட்சியான சுதந்திரக்கட்சி, இந்த அழிவுத் தன்மையான பாரம்பரிய நடவடிக்கையைக் கைவிடாதது துக்ககரமானது.

கேள்வி: எதிர்க்கட்சிகளை எல்லாம் சந்திக்கின்றீர்கள். காரணம் என்ன?

அமிர்: எமது நிலையை எடுத்துச் சொல்வதும் அவர்களின் நிலையை அறிந்து கொள்வதுமே.

கேள்வி: இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸையும் சந்திப்பீர்களா?

அமிர்: அவர்களுடன் எமக்குத் தொடர்பு உண்டு

கேள்வி: அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவதற்கான கடைசிச் சந்தர்ப்பம் இது என்று பரவலாக நம்பப்படுகின்றது. உங்கள் அபிப்பிராயம் என்ன?

அமிர்: இது கடைசிச் சந்தர்ப்பம் என்று ஒருவரால் சொல்லிவிட முடியாது. தீர்வுஒன்றைகட்ட அனைவரும் ஒன்றுபட்டு முயற்சிக்க வேண்டும். அதற்கான சந்தர்ப்பம் இது என்பது எனது எண்ணம். இச்சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் தீர்வுக்கு நீண்டகாலம் எடுக்கக் கூடும். துன்பங்களும் அதிகரிக்கும்.

கேள்வி: இச்சந்தர்ப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சமய சந்நிதிகளில்

### கலட்டி அம்மன் மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

வண்ணார்பண்ணை கிழக்கு, கலட்டி - எச்சாட்டி அருள்மிகு மஹாமாரி அம்மன் (கலட்டி அம்மன்) ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

ஆகஸ்ட் 7 ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் 9 ஆம் திகதி அம்பாள் நகர உலா வரும் வைபவமும் இடம் பெறும். (ஒ-5)



குறள்:

புத்தே ளுலகத்தும் ஈண்டு பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

பொருள்:

பிறர்க்கு உதவி செய்து வாழும் ஒப்புரவைப் போல நல்லனவாகிய வேறு அறப்பகுதிகளைத் தேவருலகத்திலும் இவ்வுலகத்திலும் பெறுதல் இயலாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G.C.E. A/L
Pure Maths App Maths
Mr. ஆறுமுகம் B Sc Hons
ஆரம்பம்: 19-07.86
Bond Institution
274/2, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.



# உதயன்

25 07 1986 வெள்ளிக்கிழமை



O/L '9
Science- Mr. BOND, Mr. செல்வவடிவேல்
Maths: Mr. லக்ஷ்மி சங்கர்
Tamil, Social: Mr சிவா
English: Mr சன் Hygiene: Mr இலங்கைராஜா
Commerce; Mr. துரை
ஆரம்பம்: 19 7.1986
BOND INSTITUT ON
கிளை: 74, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.


## எதிர்ப்புத் தினம்: புளொட் அறிக்கை

யாழ்ப்பாணம் ஜூலை 5 இன்று தமிழ்ப் பகுதிகளில் அனுஷ்டிக்கப்படும் 'எதிர்ப்பு ஜூலை படுகொலை' தொடர்பான எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) விடுத்த அறிக்கை வருமாறு:-

எமது தேசிய விடுதலைப் போராட்டம் புதிய பரிணாமத்தைப் பெற்று வளர்ச்சியடைந்து வந்த வேளையில் 1983 ஜூலை வெலிக்கடைச் சிறையிலும் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வந்த பிரதேசம் எங்கிலும் பேரினவாத பாஸிஸ்டுக்களால் நிகழ்த்தப்பட்ட படுகொலையானது எமது போராட்டத்தைப் புதிய தோர் சூழ்நிலைக்கு இட்டுச் சென்றது.

சிறீலங்கா பேரினவாத அரசானது தமிழ் பேசும் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட இப் பயங்கரமான இன அழிப்புடவடிக்கையால் தனது கோரம் நிறைந்த முகத்தை வெளிக்காட்டியது.

அதுமட்டுமன்றி தனது சார்பு முதலாளித்துவ சொகுசாதார அமைப்பின் வீழ்ச்சியையும் இனங்களுக்கிடையே யான ஐக்கியத்தைச் சிதைத்து மொத்தமாக இலங்கைத் தேசிய போராட்டத்தைப் பின் தள்ளும் தனது சதித்திட்டத்தையும் வெளிக்காட்டியது.

தமிழ் பேசும் மக்களின் போராட்ட வரலாற்றில் இந் நிகழ்வு மிக முக்கியமானதாகவும், அவதானிக்கப்பட வேண்டியதுமானதாகவும் உள்ளது.

ஆகவே வெலிக்கடைச் சிறையிலும் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்த பிரதேசம் எங்கிலும் படுகொலை செய்யப்பட்ட தோழர்களையும், மக்களையும் நினைவு கூருமுகமாகவும் அவர்கள் சிந்திய குருதியில் செறிந்த விடுதலைக் கனவுகளை நிதர்சனமாக்கவும், தொடர்ந்து எமது போராட்டத்தை வெற்றி வரை இட்டுச் செல்வதற்காக ஜூலை 25 ஐ எதிர்ப்புத் தினமாக பிரகடனம் செய்து இந் நாளில் எமது எதிர்ப்பை எதிரிக்கு வெளிப்படுத்துவோம்.

ஜூலை 25 இல் நடைபெறும் பொதுக்கருத்தரங்குகள், கூட்டங்கள் என்பவற்றில் அனைவரும் கலந்து கொண்டு மரணித்த மக்கள் போராளிகளை நினைவு கூருவோம்

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## சமூக அபிவிருத்திச் சபை அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 25 1977 ஜூலை, 1983 ஜூலை அழிவுகள் எம் இனத்தில் இதயங்களில் ஆழமான வடுக்களை ஏற்படுத்தின.

அதன் தொடர் இன்றும் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது.

அனைவரும் இன்றைய துக்க தினத்தில் பங்குபற்ற வேண்டும்

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சமூக அபிவிருத்திச் சபை மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளது (இ-10)

## கிளிநொச்சியிலும் ஹர்த்தால்

யாழ்ப்பாணம், ஜூலை 25 தமிழ் மக்கள் மீதான இனப் படுகொலைகளுக்கு எதிர்ப்பு நாளாகவும் 1983 வெலிக்கடைப் படுகொலையில் கொலைப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாகவும் கிளிநொச்சியிலும் முன்னெடுத்திலைப் இன்றுஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும்.

இப்படி சமூ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. (இ)

## ஈ.பி.ஆர்.எல்.எவ்.

யாழ்ப்பாணம், ஜூலை25 1983 ஜூலை இனப்படுகொலை ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்வு. இந் நாளில் எமது போராட்டத்தின் சாதக, பாதக அம்சங்களைக் கவனத்துக்கு எடுத்து அந்த அனுபவங்களை வருங்கால பயணத்துக்கு துணையாக்கிக் கொள்வோம். அது நம் கடமை.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி 'தேசத்தியாகிகளின் நினைவாக தேசிய யுத்தத்தைத் தொடருவோம்' என்ற தலைப்பில் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

1983 ஜூலை இனப்படுகொலையால் குடேறிய இனம் இரத்தங்களின் கடந்தகால செயல்பாடுகள் கவனமாகப் பரிசீலிக்கப்பட வேண்டியவை என்பது இந்நாளில் அனைத்து விடுதலை அமைப்புக்களுக்குமான காலத்தின் கட்டளை.

சமூப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் எதிரியின் மிருகத்தனமான ஒடுக்குமுறையின் சின்னமாய் அமைந்தது 1983 ஜூலை இனப் படுகொலை

இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது (இ-ஏ)


சகல மோட்டார் சைக்கிள் சொந்தக்காரர்கட்கும்
எம்மிடம்
HONDA YAMAHA
SUZUKI KAWASAKI
முதலியவற்றிற்கு றிபோறிங் சிலிவ் இறுக்கிச் செய்து கொடுக்கப்படும்
இயந்திரம்ஸ்
336, மணிக்கூட்டு வீதி,
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24062



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி 25-07-1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road JAFFNA

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 60 ¾86


## அல்லின் ஏப்ரகாம் வருடாந்த கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை25 அல்லின் ஏபிரகாம் ஞாபகார்த்த சபையின் முதலாவது வருடாந்த கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 30 மணிக்கு காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

27 ஆம் திகதி அன்னாரின் உருவப்படமொன்று பேராசிரியர் தமிழ் சங்கத்தினரால் வெளிவரத்தையில் உள்ள சங்க மண்டபத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்படும் (இ)

## தெல்லிப்பளை இளவாலையில் கூட்டங்கள்

பலாலி, ஜூலை 25 இனப்படுகொலைக்கு எதிராகவும் தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிராகவும் வலி- வடக்குப் பகுதியில் இன்று (வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு இரு கண்டனக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன

தெல்லிப்பளைச் சந்திக்கு அருகாமையிலும், இளவாலைச் சந்திக்கு அருகாமையிலும் நடைபெறவுள்ள இக்கூட்டங்களை தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கெதிரான போராட்டத்திற்கான இணை புக்குழு ஒழுங்கு செய்துள்ளது' (இ-119)

## ஆஸ்பத்திரி உயரதிகாரி வீட்டுத் தொலைபேசிக்கு நோய் இன்னும் தீரவில்லை!

யாழ்ப்பாணம், ஜூலை 25 இன்றைய பதற்றச் சூழ்நிலையில் முக்கியமாக விளங்கும் யாழ் போதனா ஆஸ்பத்திரியின் பிரதம நிர்வாகியான வைத்திய அத்தியட்சகருடன், அவரது வீட்டில் தொடர்பு கொள்ள முடியாத நிலை.

அத்தியட்சகரின் வீட்டில் உள்ள உத்தியோக பூர்வ தொலைபேசி, கடந்த மூன்று மாதங்களாக தொல்லை கொடுப்பதே இதற்குக் காரணம்.

அவசரத்துக்கு ஆஸ்பத்திரியில் இருந்தும் அத்தியட்சகரை அவரது வீட்டில் தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது

அத்தியட்சகரும் ஆஸ்பத்திரியுடன் தொடர்பு கொள்ள தனது தொலைபேசியை பாவிக்க முடியாத நிலையில் அயல் பகுதியில் உள்ள வீட்டுத் தொலைபேசியை பாவிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியிருக்கிறார்.

இந்த அவலநிலை பற்றி வைத்திய அத்தியட்சகர் டாக்டர் சுரேந்திரன் நச்சினார்க்கினியன் உதயனிடம் முறையிட்டார்

தொலைபேசி அடித்தவுடன் மறுமனமே 'சீ' வரை எடுத்துப் பேச வேண்டும்.

இல்லை என்றால் அவ்வளவுதான். 'கட்' ஆகிவிடும்

அப்படி உடனே ரிசீவரை எடுத்துப் பேசத் தொடங்கினாலும் சில விநாடிகளில் 'கூ' என்ற சத்தம் கேட்கத் தொடங்கும். மறுகணம் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிடும்

இது பற்றி மூன்று மாதங்களாக தொலைத் தொடர்புத் திணைக்களத்துக்கு முறையிட்டும் பலனில்லையாம்!

இப்படிச் சவால் கொடுத்தார் டாக்டர் நச்சினார்க்கினியன்

'உதயன்', டாக்டர் நச்சினார்க்கினியனுடன் அவரின் வீட்டுத் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது 'கூ' என்ற சத்தத்துடன் தொடர்பு துண்டிக்கப்பட்டது (இ-ஏ-6)

## இதுவ ர....

(3-ம் பக்கத் தொடர்ச்சி) பத்தைத் தவறவிடக் கூடாது என்று கருதும் நீங்கள், முடிவு ஒன்று எடுக்கப்படும் வரை அரசுடன் பேசுவதை தொடர்வீர்களா?

அமிர்: ஆம். அது பற்றி பாரதூரமாகக் கருதுகின்றோம். எமது அடிப்படை விஷயங்களில் இறுதித் தீர்வுகளை எடுப்பதில் அக்கறை செலுத்துகின்றோம்

கேள்வி: பேச்சுக்களுக்கு போராளிகளையும் அழைக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்பீர்களா?

அமிர்: கடைசி ஒரு கட்டத்தில் அடிப்படை விஷயங்கள் குறித்து நாம் ஒர் உடன்பாட்டுக்கு வந்த பின்னர்.

(முடிவு)

## அவசரகாலச் சட்டம் நீடிப்புப் பிரேரணை:

# மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவையில்லை

## திருத்தச் சட்டம் நேற்று நாடாளுமன்றத்தில் விவாதம்

கொழும்பு, ஜூலை 25 அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணையை சாதாரண பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வசதி செய்யும் அரசமைப்புச் சட்டத்தின் பத்தாவது திருத்தம் நேற்று நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தற்போதைய சட்டத்தின்படி, நீடிப்புப் பிரேரணையை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகள் தேவை

10 ஆவது திருத்தத்தைச் சமர்ப்பித்தபின்னர் நடந்த விவாதத்தில் பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி சொன்னதாவது:

விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் கீழ் பல விக்கு வரும் எந்த அரசியல் கட்சியும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெறுவது கஷ்டம்.

ஆகவே இத் திருத்தச் சட்டத்தை இப்போது கொண்டு வந்து நிறைவேற்றுவது அவசியமாகிறது

இப்படி அமைச்சர் அத்துலத் முதலி சொன்னார்

கொத்மலை எம் பி திரு ஆனந்த தஸநாயக்க பேசும்போது "பொதுத் தேர்தல் ஒன்று நடைபெற இன்னும் 3 வருடங்கள் இருக்கும்போது இச் சட்டத் திருத்தத்தை ஏன் அவசரப்பட்டுக் கொண்டுவரவேண்டும்?" — என்று கேட்டார்.

கொத்மலை எம் பியின் கருத்தை அம்பேகமுவ எம். பி. றிச்சர்ட் பத்திரான, களனி எம் பி. டியூ குணசேகரா ஆகியோர் ஆதரித்துப் பேசினர் (இ-ஏ)

## வைத்தீஸ்வர அபிவிருத்தி சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 25 யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை வித்தியாலய விவேகானந்த மண்டபத்தில் நடைபெறும்.

அதிபர் திரு சி சிவசரவணபவன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் யாழ் வட்டாரக் கல்வி அதிகாரி திரு இ சிவானந்தன் விசேஷ விருந்தினராகக் கலந்து கொள்வார்

மாணவர்களின் கல்வி முன்னேற்றம் சம்பந்தமான பெற்றோர்—ஆசிரியர் கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது (இ)

## பரீட்சை---

(1ம் பக்கத் தொடர்ச்சி) பட்டுள்ளன

இதேவேளை யாழ் மாவட்டத்தில் 45 பரீட்சை நிலையங்களில் நடந்து வந்த இப் பரீட்சை இந்த முறை 62 பரீட்சை நிலையங்களில் நடைபெறும் (இ-10)

## அராலியில் சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை25 அராலி மேற்கு வண்ணப்புரம் விஸ்வநாதேஸ்வரர் ஆலயத்தில் இன்று காலை சங்காபிஷேகம் நடைபெறும்

மாலையில் பூந்தண்டிகையில் சுவாமி வீதி வலம் வருவார்

பலாலி ஆசிரியர் கலாசாலை ஆங்கில விரிவுரையாளர் திரு க கயிலாயநாதன் 'சைவ வாழ்வு' என்னும் பொருள் பற்றி உரையாற்றுவார். (இ-ம)

## கலையரசு நினைவுதினக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 25 கலையரசு சொர்ணலிங்கம் ஞாபக தினத்தை ஒட்டி மறுமலர்ச்சி மன்றம் நடத்தும் நினைவு தினக் கூட்டம் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நவாலி வை. எம். சி ஏ மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி சி. மௌனகுரு கலையரசு ஞாபகார்த்தப் பேருரை நிகழ்த்துவார்

குழந்தை சண்முகலிங்கம், பிரான்ஸிஸ் ஜெனம், கவிஞர் ஏ. வி. பொன்னுத்துரை, கிதானியார் திரு செல்வரத்தினம் ஆகியோரும் பேசுவர். மன்றத் தலைவர் திரு பொ செல்வரத்தினம் தலைமை வகிப்பார் (இ-ஏ)

## மாணவ...

(1ம் பக்கத் தொடர்ச்சி) இரவு 8 மணியளவில் முக்கோணத்தீவில் இருந்து 3 படகுகளில் புறப்பட்டனர். மூன்று படகுகளும் ஒன்றன் பின் ஒன்றாக திருகோணமலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த சமயம் ஒரு படகு இயந்திரக் கோளாறினால் அவதிப்பட்டது.

மீன் பிடிக்கும் வலைக்குள் படகின் 'புறெப்பல்லர்' சிக்கிக்கொண்டதால் இக்கோளாறு ஏற்பட்டது.

படகு எப்படியும் வந்துவிடும் என்று நம்பி மற்ற இரண்டு படகுகளும் பயணத்தைத் தொடர்ந்தன.

நேற்றுக்காலை இரண்டு படகுகளும் திருமலையை அடுத்துள்ள கடற்கரையை அடைந்தன. ஆனால் மூன்றாவது படகு கரைசேரவில்லை

கரைசேர்ந்த படகுகளில் குமார் மாணவ, மாணவிகளுட்பட 60 தமிழர் இருந்தனர்.

கரைசேராத படகில் இன்னும் மாணவர், மாணவிகள் உட்பட 25 தமிழர் இருந்தனர் என்று சொல்லப்படுகின்றது.

நேற்றுப் பகல் புடைவைக்கட்டுப் பகுதிக்கரை படகுகளில் பலர் சென்று காணாமற்போன படகைத் தேடிய போதும் அச்சமயம் புடவைக்கட்டு ... கள், ஒரு படகை கடற்படையினர் பிடித்துச் சென்றதைத் தாங்கள் கண்டதாகத் தெரிவித்தனராம்

இதைத் தொடர்ந்து நேற்று திருகோணமலை பிரசைகள் குழுவுக்கு முறையிடப்பட்டது. குழு துணைச்செயலாளர் வண பிதா பீட்டர் குருகுல ஆராச்சி இவ் விஷயத்தை திருமலை இணைப்பதிகாரி சேனக் விஜயரத்தினவின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

ஏற்கனவே முக்கோணத் தீவில் இருந்து படகு மூலம் திருமலை திரும்பிக் கொண்டிருந்த 7 பேரை படகுடன் காணவில்லை என்று திருமலைப் பிரசைகள் குழுவிற்கு முறையிடப்பட்டது தெரிந்ததே (இ-ஏ.150)

## குண்டுவெடித்து--

(1ம் பக்கத் தொடர்ச்சி) சுவரச் 2 மைல் தொலைவில் உள்ளது இலந்தபலகல கிராமம்

காயமடைந்தவர்கள் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

இறந்தவர்களில் 32 ஆண்களும், 8 பெண்களும் ஒரு குழந்தையும் அடங்குவர்

இறந்தோரில் ஒருவரைத் தவிர எல்லோரும் சிங்களவர் என்று தெரியவருகிறது.

காயமடைந்தோர்களில் 11 பெண்களும், 12 ஆண்களும் அடங்குவர், காயமடைந்த பெண்களில் 9 பேர் சிங்களவர் ஒருவர் முஸ்லிம், ஒருவர் அடையாளங் காணப்படவில்லை

காயமடைந்த ஆண்களில் 17 பேர் சிங்களவர், 3 பேர் முஸ்லிம்கள், 2 பேர் தமிழர்

எனினும் நேற்று இரவு கிடைத்த அரசாங்கத்தின் அறிக்கை ஒன்றில் இறந்தோர் எண்ணிக்கை 12 மட்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. (இ-ஏ)

## வெலிக்கடையில் மீண்டும் தாக்குதல்

யாழ்ப்பாணம் ஜூலை 25 வெலிக்கடைச் சிறைச்சாலையில் கடந்த புதன் இரவு சிறைச்சாலையிலுள்ள 6 தமிழ் இளைஞர்கள் சிறை அதிகாரிகளினால் கோரமாகத் தாக்கப்பட்டனர்

அதில் இரண்டு சிறைக்கைதிகள் மிகவும் அபாயகரமான நிலையில், கொழும்பு இராணுவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்

இது பற்றி அறிந்த சக தமிழ்க் கைதிகள் சிறையில் இருந்தவண்ணம் ஆர்ப்பாட்டம் செய்த போதும் சிறை அதிகாரிகள் அவர்களைத் துப்பாக்கி முனையில் மிரட்டினர்.

இச்சம்பவம் பற்றி அறிந்த சிறை உயர் அதிகாரி விரைந்து வந்து நிலைமையை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார்

தமிழ் இளைஞர்கள் தமது கண்டனத்தை அவர்களுக்குத் தெரிவித்து அன்றிரவு முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்

புளொட் விடுத்த அறிக்கை ஒன்றில் இது பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## நடேசு பரமகுரு

மானிப்பாய், தோட்டத்தைச் சேர்ந்த நடேசு பரமகுரு நேற்று (24-7-86) காலமானார்.

சமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும்.

தகவல்
நடேசு குடும்பத்தினர்
மானிப்பாய்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# அமைப்பு வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 1986ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்

அட்டவணை

| இல. | வேலை விபரம் | கேள்விப் பிணைப் பணம் (மீளளிக்கப்படக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்கப்பட முடியாதது) | ஒப்பந்தக்கார பதிவுத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | மின்சாரப்பகுதி அமைப்பு வேலைகளும் விஸ்தரிப்பு வேலைகளும் | 1000/- | 150/- | 300,000/- |
| 2 | யாழ் பொதுசன நூலக நல்லூர் கிளை நூலகம் | 3000/- | 250/- | 1,000,000/- |
| 3 | (அ) நாவாந்துறைச் சந்தை விஸ்தரிப்பும் புனரமைத்தலும் (ஆ) பெரியகடைச் சந்தை திருத்தவேலை | 500/- | 150/- | 800,000/- |
| 4 | பாஷையூரில் மீன்பிடிவலை பின்னும் நிலையம் அமைத்தல் | 500/- | 150/- | 100,000/- |
| 5 | காதி அபூபக்கர் வீதியூடாக செல்லும் வடிகால் புனரமைத்தல் | 500/- | 150/- | 800,000/- |

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 1986ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணி வரை அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு கேள்விக்கும் எதிராகவுள்ள கேள்விப் பிணைப்பணம், கேள்விப்படிவக்கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் இணைப்பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சி. வி. கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 24-07-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org